# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2084/21 - 2018 අගෝස්තු මස 15 වැනි බදදා - 2018.08.15

*2084/21 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

***(262ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின்***

***66 அ (1) ஆம் பிரிவின் கீழ் உஹன பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*உஹன பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகல் காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ (1) ஆம் பிரிவின் கீழ், உஹன பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட ஹேவா உலவடுகே சுசந்த என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும், அக்கட்சியைச் சேர்ந்தவருமான உஹன பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ரத்நாயக்க முதியன்சேலாகே ஜயவீர ரத்நாயக்க என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*இப்போது உஹன பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ஆர். சசீலன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ரத்நாயக்க முதியன்சேலாகே ஜயவீர ரத்நாயக்க என்பவர் உஹன பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*ஆர். சசீலன்,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*உஹன பிரதேச சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*அம்பாறை,*
*2018, ஒகத்து 13.*

*8 - 1033*